Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2024 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

**Tuesday 15 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2024*

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 1**

1. What evidence from the text indicates that the siblings are close? **4**

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 2**

2. What points does the speaker make to convince the Parent Teacher Association to support the plan? **5**

- ____________________

____________________

- ____________________

____________________

- ____________________

____________________

- ____________________

____________________

- ____________________

____________________

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 3**

3. (a) According to the interview, why did the author win this award? **2**

(b) What does the author do to engage all of her readers? **4**

**Part B** (Questions 4–6)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 4**

4. What lessons did Mayuri learn on her week away? **4**

மயூரி வீட்டுக்கு வெளியே கழித்த வாரத்தில் அவள் கற்றுக்கொண்ட பாடங்கள் எவை?



PLEASE TURN OVER

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 5**

5. According to the text, outline the reasons why parents might allow their children to participate in this experience. **5**

   இந்தப் பனுவலின்படி, ஏன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இந்த அனுபவத்தில் பங்குபெறுவதற்குச் சம்மதிக்கக்கூடும் என்பதை விபரிக்குக.

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 6**

6. Why does Edward believe that Kanmany deserves his gratitude? **6**

எட்வேட் ஏன் தனது பாராட்டுக்குரியவர் கண்மணி என்று நம்புகிறார்?

**End of Section 1**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | |    Centre Number | | | | | | |

**2024** PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2024

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

அனுப்புபவர்: திருமகன்@அன்பு.கொம்

பெறுபவர்: நீங்கள்

24-09-2024

அன்புள்ள மகிழினி,

எனது நண்பரும் உங்களது மாமனாருமான சீலன் கூறியதன்படி உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன்.

பதினொராம் வகுப்பில் கற்கும்போதே எதிர்காலத்தில் ஆற்றவுள்ள தொழில்பற்றிச் சிந்திக்கின்ற உங்களுக்கு எனது பாராட்டுக்கள். அதுவும் நீங்கள் கட்டடவடிவமைப்புத்துறையைத் தெரிவுசெய்யவிருப்பது எனக்குப் பெருமகிழ்வைத் தருகிறது.

அந்தத்துறை தொடர்பான அடிப்படை விடயங்கள் சிலவற்றை நீங்கள் கேட்டதற்கிணங்க இங்கே தருகிறேன். எந்தநேரத்திலும் எவ்வகையான உதவிகளையும் கட்டடக்கலை நிபுணர் என்றவகையில் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்.

கட்டடவடிவமைப்பு, கடினமான ஆனால் நல்ல மனநிறைவைத் தருகின்ற ஒரு கற்கைநெறியாகும். அது உண்மையில் விஞ்ஞானமும் கலையும் இணைந்ததாக இருப்பதால், பலதரப்பட்ட திறமைகள் அவசியமாகின்றன. புதியனவற்றை ஆக்கும் திறன்களை விருத்திசெய்வதுடன் கணிதம், பௌதிகவியல் ஆகியபாடங்களைத் திறமையாகக் கற்றலும் அவசியம்.

நீங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைபெற்றிருப்பதாக, சீலன் தெரிவித்திருந்தார். வாடிக்கையாளர்களுடனும் ஒப்பந்தக்காரர்களுடனும் காத்திரமானமுறையில் தொடர்புகொள்வதற்கு உங்களது மொழிப்புலமை நன்கு உதவும். இருந்தபோதிலும் கணினியூடான முப்பரிமாண வடிவமைப்புப் பாடத்தையும் தெரிவுசெய்தால் அது உங்களது மனதில் உதித்த கட்டட வடிவமொன்றை அது பற்றிய அனுபவமில்லாத முதலீட்டாளர்களுக்குத் தெளிவாகக்காட்டி விரும்பவைக்க உதவும்.

இப்போது பலமாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டப்படிப்புக்களை மேற்கொள்வதை நீங்கள் அறிவீர்கள். சீலன் கூறியவற்றிலிருந்து நீங்கள் அதற்குப் பூரண தகுதியுடையவரென நான் கருதுவதால், கட்டடப்பொறியியலை அல்லது செயற்றிட்ட முகாமைத்துவத்தை

இரண்டாவது பட்டத்துக்காகத் தெரிவுசெய்யலாம். இதன்மூலம் ஏனைய ஊழியர்கள் பலர் உங்களது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுவதற்கான உரிமையையும் அதிகாரத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.

இன்று சிலர் கட்டடங்களைத் தமிழ்க் கட்டடக்கலை அமைப்பில் நிர்மாணிப்பதை விரும்புகிறார்கள். உங்கள் பெற்றோரிடமிருந்து நீங்கள் பரம்பரை பரம்பரையாகப்பெற்ற சிற்பக்கலை பற்றிய அறிவு உங்கள் கல்விக்கு உதவும். எவ்வாறாயினும், எமது கடமை முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பான, கவர்ச்சியான தோற்றத்தையுடைய, சிறந்த உபயோகவசதிகள்கொண்ட, கட்டடங்களை வடிவமைப்பதேயாகும்.

உயர்வான வேறெங்கும் இல்லாத ஒருவடிவமைப்பை மனதில் உருவாக்கி, அது நிஜவடிவில் கட்டிமுடிக்கப்பட்ட நிலையில் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

உங்கள் விடுமுறைக்காலங்களில் இங்கு சுற்றுலாவாக வந்து என்னை நிழலாகத்தொடர்ந்து உங்கள் எதிர்காலத் தொழில் பற்றிய ஒரு பார்வையைப் பெறுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

நல்வாழ்த்துக்கள்

அன்புடன்,

திருமகன்.

QUESTIONS

**Marks**

(a) What challenges may Mahilini face in her career choice? **2**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(b) What positive qualities does Mahilini have that will benefit her in her future career? **3**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**மொய்விருந்து**

தமிழ்பேசும் நாடுகளில் புராதனகாலத்தில் ஆரம்பிக்கப்பெற்று இன்றும் தொடர்ந்துவரும் குடும்பநிகழ்வுகளில் ஒன்று மொய்விருந்து ஆகும். பொருளாதாரநிலையில் பின்தங்கிய குடும்பங்களை உறவினர்களும் ஏனைய கிராமமக்களும் சேர்ந்து கைதூக்கி விடுகின்ற நிகழ்ச்சி இதுவாகும். உதாரணமாக ஒரு விவசாயிக்கு விதைப்பு அல்லது நடுகைக் காலத்தில் அதிகபணம் தேவைப்படலாம். அவரிடம் அந்தளவுதொகை இல்லாமல் இருக்கலாம்.

அச்சமயத்தில் அவ்விவசாயி, தான் மொய்விருந்து ஒன்றை ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்து, அதற்கான நாளையும் அறிவிப்பார். குறிப்பிட்ட தினத்தன்று விவசாயின் வீட்டில் அறுசுவை விருந்துணவு பரிமாறப்படும். அக்கிராமத்தவர்கள் அனைவரும் எந்தவிதமான வேறுபாடுகளையும் காட்டாமல் அந்தவிருந்தில் பங்குபெற்று உணவுண்டு உரையாடி மகிழ்ந்த பின்னர், ஒவ்வொருவரும் தம்மாலியன்ற பணத்தொகையை விருந்தை நடத்திய விவசாயியிடம் கொடுத்துச் செல்வர்.

விவசாயத் தேவைகளுக்கன்றி குடும்பத்தில் நிகழும் சிலவிழாக்கள் முதலியவற்றுக்காகவும் மொய்விருந்து நடத்தப்பெறலாம்.

விருந்தின் நிறைவில் பணத்தைப் பெற்றவர் தந்தவர்களின் பெயர்களையும் தொகையையும் பதிவுசெய்துவைத்து, ஒவ்வொருவருக்கும் அவரவர் மொய்விருந்தை நடத்தும்போது, அதேதொகையை அல்லது அதிகரித்ததொகையை வழங்குவார். அவசரப்பட்டுப் பணத்தைத் திரும்பச்செலுத்தி விடவேண்டும் என்ற அவசியமில்லை. வட்டியும் இல்லை.

தனது வசதிக்கும் பிறரதுதேவைகளுக்கும் ஏற்றபடி நடந்தால் சரி. இவையாவும் எழுதாத மீறப்படாத நடைமுறைகளாகக் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன.

மிக அரிதாக ஒருவர் இந்த நடைமுறைகளை மீறினாராயின், பெரும்பாலும் ஓர் ஆலமரத்தின்கீழ் கூடுகின்ற கிராமநீதிமன்றம்போல விளங்குகின்ற பஞ்சாயத்தில் முறையிடப்பெறும். ஒரு தலைவரையும் அக்கிராமத்தைச்சேர்ந்த சில குழு உறுப்பினர்களையுங்கொண்ட பஞ்சாயத்து, அம்முறையீட்டுக்கான தீர்ப்பை வழங்கும்.

கிராமமொன்றின் மொத்தவளர்ச்சிக்குமே மொய்விருந்துவைத்தல் ஒருவரப்பிரசாதமாக அமைகிறது.

மாற்றங்களுக்கு அதிகம் உட்படாத பழையகிராமங்களில் இன்றும் மொய்விருந்து நடைமுறைகள் அதிகம் மாறாமல் இருக்கின்றன. கிராமங்கள் நகராக்கமடைந்து சனத்தொகை பெருகி, கணினியும் கைத்தொலைபேசியும் உபயோகத்துக்கு வந்தாலுங்கூட, மொய்விருந்துவைக்கும் பழக்கம் இன்னமும் அழிந்துவிடவில்லை. நவீனமுறையில் அழைப்பிதழ் அச்சிடப்பெற்று, கைத்தொலைபேசியில் நினைவுபடுத்தப்பெற்று, கணினிமூலம் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பெற்றுப் பெரியஅளவில், ஆனாலும் அடிப்படைநோக்கம் மாறாதநிலையில் நடந்துவருகிறது.

QUESTIONS

**Marks**

(a) What roles do farmers and the community have in maintaining the practice of Moivirunthu, according to the article? **3**

(b) According to the text, how has technology influenced the practice of Moivirunthu? **2**

**Part B** (Question 9)
(15 marks)

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 8.

**பணமா அட்டையா?**

நாங்கள் குபேராவங்கியின் புதிய வங்கியட்டையையும் அது எவற்றை வழங்கவுள்ளது என்பதையும் மேலும் அறிந்துகொள்வதற்கு அங்கு சென்றோம். வாடிக்கையாளர்கள் பணத்தைத் தாள்களாகவோ நாணயங்களாகவோ பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு இந்த அட்டை வழிசெய்கின்றது. நீங்கள் இதனை உங்கள் கைத்தொலைபேசியிலும் பயன்படுத்தலாம்.

நீங்கள் பெற்றுக்கொள்ளும் அட்டைக்கு, அதுபெறப்பெற்ற நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு எவ்வித கட்டணங்களும் வசூலிக்கப்படமாட்டாது. அதன் பின்னர் வருடாந்தக் கட்டணமாக 400 ரூபாய் அறவிடப்படும்.

ஒரு ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையான பெறுமதியை ஒருதொடுதல் மூலம் வழங்கிவிடலாம். ஒரு நாளைக்கான உச்சத்தொகை 2000 ரூபாவாக இருக்கும்.

அட்டையொன்றைப் பெறுகின்ற ஒவ்வொருவரும் பெறக்கூடிய கடன் தொகை 10 000 ரூபாய் ஆகும். அட்டையொன்றைப் பெற்ற ஒருவர் அதற்கு மேலதிகமானதொகை தேவைப்பட்டால், தமக்கு அருகிலிலுள்ள எமது கிளையொன்றுடன் தொடர்புகொள்ளலாம்.

ஒருவர் பெறும் கடன்தொகைக்கு முதல் ஆறுமாதங்களுக்கு எந்த வட்டியும் கட்டத்தேவையில்லை. அதன் பின்னர் செலுத்தவேண்டிய வட்டி 25 விழுக்காடு ஆகும்.

உங்கள் பணத்தை, தாள்களாகவும் நாணயங்களாகவும் எடுத்துச்செல்லாமல், களவுங்கொடுக்காமல், கேட்பவர்களுக்குக்கும் கொடுத்துவிடாமல், வீண்செலவும் செய்யாமல், பாதுகாக்கச் சிறந்த வழி வங்கிஅட்டையைப் பயன்படுத்தலே.

இருந்தபோதிலும், நீங்கள் உங்கள் அட்டையைத் தொலைத்துவிட்டால், அதுபற்றி 24 மணி நேரத்துக்குள் வங்கிக்கு அறிவிப்பதுடன், பதிலாக இன்னொரு அட்டையைப்பெறுவதற்கான கட்டணத்தையும் செலுத்தவேண்டும்.

இன்று அநேகமாக நீங்கள் வாங்கும் எல்லாப் பொருட்களையும் உங்களுக்குத் தேவையான சேவைகளையும் வங்கிஅட்டை மூலம் பெற்றுக்கொள்ளும் வசதி வந்துவிட்டது. குபேராவங்கி இக்கொடுப்பனவுகளை ஒரேநாளில் நிறைவேற்றுகின்றது.

கைத்தொலைபேசிப் 'பயன்பாட்டை' உபயோகித்து கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதன்மூலம் நீங்கள் வெகுமானப்புள்ளிகளைப் பெறலாம். அவை உங்களுக்குப் பரிசில்களைப் பெற்றுத்தரும்.

அவ்வாறிருந்தாலும், நீங்கள் உங்கள் வங்கிக்கணக்கிலிருக்கின்ற அல்லது உங்களால் பெறக்கூடிய தொகைக்கு அதிகமாகச் செலவுசெய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இன்றும், சிலர், பணம் எவ்வாறு செலவாகின்றது என்பதைக் கண்காணிக்கவும் சேமிக்கவும், பணத்தாள்களையும் நாணயங்களையும் பயன்படுத்துவதே பாதுகாப்புமிக்க மிகவும் வசதியான வழிமுறை என்று நம்புகின்றார்கள்.

இன்னமும் பணத்தாள்களையும் நாணயங்களையும் மாத்திரமே பயன்படுத்திப் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யவேண்டிய இடங்களும் நிலைமைகளும் உள்ளன.

பணமா அட்டையா? நீங்களே தீர்மானியுங்கள்.

QUESTION

Your cousin from a Tamil-speaking village sent you this editorial article, 'Cash or Card?' Write an informal letter to your cousin in which you evaluate the arguments presented by the author and make a recommendation about which is better: cash or card.

தமிழ்பேசும் நாடொன்றின் கிராமமொன்றிலிருந்து, உமது மைத்துனர் ஒருவர், இந்த 'பணமா அட்டையா' என்ற பத்திரிகைத் தலைப்புக் கட்டுரையை உமக்கு அனுப்பியுள்ளார். எழுத்தாளரால் முன்வைக்கப்பெற்ற விவாதங்களை மதிப்பீடுசெய்து, உமது மைத்துனருக்கு, பணமா அட்டையா சிறந்ததென்பதற்கான தகவல்களைத்தெரிவித்து, உமது பரிந்துரையுடன்கூடிய ஒரு தனிப்பட்ட கடிதம் எழுதுக.

---

You may make notes in this space. These notes will NOT be assessed.

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 9

**End of Section 2**

BLANK PAGE

BLANK PAGE

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2024** PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2024

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. The structure of Tamil families has evolved over time. This has been particularly evident in the changing roles of women. Write a journal entry reflecting on how these changes have impacted on your local Tamil community.

    காலப்போக்கில், தமிழ்க் குடும்பக் கட்டமைப்புகளில் ஏற்பட்டுள்ள நவீனமாற்றங்களுடன் சேர்ந்து குடும்ப அங்கத்தினரின், குறிப்பாகப் பெண்களின், வழக்கத்திலிருந்துவந்த கடமைகளும் மாறிவிட்டன என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்தமாற்றங்கள் உள்ளூர்த் தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு செயற்குறிப்பு எழுதுக.

11. Many everyday habits and customs that Tamils have followed for thousands of years have spread all over the world with migration. Write the script of a persuasive speech to give at a meeting of Tamils of different ages, encouraging them to continue to practise these habits and customs wherever they live.

    தமிழர்கள் பல்லாயிரமாண்டுகளாகப் பின்பற்றிவருகின்ற அன்றாடப் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் பல, இன்று புலம்பெயர்வு காரணமாக உலகம் முழுவதும் பரவியுள்ளன. தமிழர்கள் எங்குவாழ்ந்தாலும் அவர்கள் அவற்றைத் தொடர்ந்து பின்பற்ற ஊக்குவிக்கும் வகையில் வேறுபட்ட வயதுடைய தமிழர்கள் கலந்துகொள்ளும் கூட்டமொன்றில் நீர் வழங்கவுள்ள பேச்சுக்கான பனுவலை எழுதுக.

12. The rapid growth of technology in the 21st century is especially evident in the emergence of artificial intelligence. Write a blog post for your local science club's online magazine about how artificial intelligence is changing the way we live and learn.

    இருபத்தொராம் நூற்றாண்டில் வேகமாகவளர்ந்துவரும் நவீனதொழில்நுட்பத்தில், செயற்கை நுண்ணறிவு முன்னிற்கிறது. நாம்வாழும், கற்கும் முறைகளில் இந்தச் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதுபற்றிய வலைப்பதிவொன்றை உள்ளூர் விஞ்ஞானக்கழக இணையவழிச் சஞ்சிகைக்காக எழுதுக.

You may make notes in this space. These notes will NOT be assessed.

Question Number:

**End of Section 3**

BLANK PAGE

BLANK PAGE